CC 280/2018

31.10.2023

பு.சா.1,

பெயர்: பாலசுப்பிரமணியம்

த/பெ. குட்டியப்பன்

பு.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் என் வீட்டில் வைத்திருந்து ரூ.5 லட்சத்தை எதிரிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரியின் குடும்பத்தாருடன் எனக்கு நல்ல பழக்கம் என்றால் சரிதான். என் மனைவி பெயரில் ரூ.2 லட்சம், 5 லட்சம் மற்றும் 10 லட்சத்திற்கான குத்துச் சீட்டு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் வியாபாரத்திற்காக தின வசூலுக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் நிறைய பேருக்கு பணம் கொடுத்து வசூல் செய்துவருகிறேன் என்றாலும் தற்போதும் மேற்படி தொழிலைச் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல.

எதிரி என்னிடம் மேற்சொன்னது போல் 4,5 முறை தினவசூலுக்காக என்னிடம் பணம் வாங்கித் திருப்பித் தந்ததாகச் சொல்கிறார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் குத்துச் சீட்டு ரூ.5 லட்சம் சீட்டு போட்டு என்னிடம் பணம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி அவரது குடும்பச் செலவிற்காக பணம் வாங்கிச்சென்றார். நான் வருமான வரி கட்டி வருகிறேனா என்றால் கட்டுவதில்லை. எனக்கு நிலத்தின் மேல் ரூ.20 லட்சம் கடன் உள்ளது என்றால் சரிதான். பணம் வாங்கியபோது எதிரி அண்ணாமலை Hardwares தொழில் நடத்திவந்தார். எத்தனை வருடங்கள் மேற்படி தொழிலை நடத்திவந்தார் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

எதிரி தொழில் நடத்திவந்தபோதுதான் என்னிடம் பணம் வாங்கினார் என்றாலும், என்னை பைனான்ஸ் பாலு என்றுதான் அழைப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி வரும்போது காசோலையை அவர் எடுத்துவந்தார், என் முன் வைத்துதான் நிரப்பிக்கொடுத்தார் என்றால் சரிதான். நான் ரூ.5 லட்சம் கொடுத்தற்கு ஆதரவாக காசோலையைச் தவிர வேறு எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான்.

காசோலையில் உள்ள கையெழுத்திற்கும் அதில் எழுதி உள்ள வசனத்திற்கும் மை வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல, எதிரிதான் அதனை நிரப்பி கொடுத்தார். எனது காட்டின் மேல் உள்ள வங்கி லோன் 5 -6 வருடங்களாக உள்ளது என்றால் சரிதான். தினமும் பணம் கொடுத்து வாங்குவதற்கு சின்ன குருவி சீட்டு வைத்து தான் வரவு செலவு

செய்வார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி உங்களிடம் கைக்கடனாக பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும், சீட்டு போட்ட வகைக்கு ஜாமீனாக எதுவும் நிரப்பப்படாத மற்றும் கையொப்பம் இடாத வெற்று காசோலையை கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல.

எதிரி நீங்கள் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும், அவர் உங்களிடம் சீட்டு போட்ட வகைக்கும் மற்றும் தின வசூலுக்கு வாங்கிய பணத்திற்கும் ஜாமினுக்காக கையொப்பம் இடாத வெற்று காசோலையை கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல.

எதிரி கைமாத்தாக எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் தான் பணம் வாங்கினார், அவர் கூறுவது போல் தின வசூலுக்கோ அல்லது சீட்டுக்காகவோ எந்த பணமும் நான் வாங்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.